இலங்கை மாணவர் கல்வி நிதியம் (1988 – 2019) ,அவுஸ்திரேலியா : 31 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும்

Written by administrator
Friday, 18 October 2019 07:25 - Last Updated Friday, 18 October 2019 07:34

இலங்கையில் நீடித்த போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, 1988 ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியாவிலிருந்து உதவிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் முப்பத்தியோராவது ஆண்டு நிறைவு நிகழ்வும், வருடாந்த பொதுக்கூட்டமும் இம்மாதம் 19 ஆம் திகதி (19-10-2019) சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணிவரையில் மெல்பனில் வேர்மண் தெற்கு சனசமூக நிலையத்தில் (Vermont South Community House - Karobran Drive, Vermont South VIC 3133) நிதியத்தின் தலைவர் திரு. லெ. முருகபூபதியின் தலைமையில் நடைபெறும்.

இதுவரையில் நூற்றுக்கணக்கான அன்பர்களின் ஆதரவுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு உதவிய கல்வி நிதியத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வும், மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல் அமர்வும் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு நிதியத்தின் உறுப்பினர்களையும், மாணவர்களுக்கு உதவ விரும்பும் அன்பர்களையும் அன்புடன் அழைக்கிறது இலங்கை மாணவர் கல்வி நிதியம்.

1 / 2

இலங்கை மாணவர் கல்வி நிதியம் (1988 – 2019) ,அவுஸ்திரேலியா : 31 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வும்

Written by administrator
Friday, 18 October 2019 07:25 - Last Updated Friday, 18 October 2019 07:34

இந்நிகழ்வில் கிடைக்கப்பெறும் நன்கொடைகள் நிதியத்திற்கே வழங்கப்பட்டு, மாணவர்களின் நிதிக்கொடுப்பனவில் சேர்த்துக்கொள்ளப்படும்.

2018 – 2019 காலப்பகுதிக்கான ஆண்டறிக்கை - நிதியறிக்கை என்பனவும் இந்நிகழ்வில் சமர்ப்பிக்கப்படும்.
இலங்கை மலையகத்தில் வறுமைக்கோட்டில் வதியும் ஏழைத் தமிழ் மாணவர்களுக்கும் கல்வி நிதியம் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளதுடன், அவர்கள் தொடர்பான தகவல் அமர்வும் காணொளிக்காட்சியும் இக்கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மாணவர்களுக்கு உதவ விரும்பும் அன்பர்களையும் வருகை தருமாறு கல்வி நிதியம் அன்புடன் அழைக்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு :

முருகபூபதி (தலைவர்)0416 625 766
திவானா கிருஷ்ணமூர்த்தி (செயலாளர்) 0402 034 152
வித்தியா ஸ்ரீ ஸ்கந்தராஜா (நிதிச் செயலாளர்) 0404 808 250
விமல் அரவிந்தன் (துணை நிதிச் செயலாளர்) 0414 446 796

இணையத்தளம் : www.csefund.org
மின்னஞ்சல் : kalvi.nithiyam@yahoo.com

letchumananm@gmail.com

2 / 2